Rule 4 relates to compulsory registration in respect of existing hostels, lodging houses and homes for Women and Children, which has been established, registered or maintained under any other law on or after the commencement of this Act. The Collector's responsibilities while issuing a certificate of registration in Form V and if fails to apply for registration within the period specified in sub-rules 1& 2, action has been initiated according to sub-section (2) of Section 20 of the Act.

Rule 5 provides the procedure to appoint a manager or resident manager and their responsibility.

FORM-I to VIII - Relevant forms of these rules as appended to the Notification.

DEPUTY SECRETARY: Please elaborate about Tamil Nadu Hostels and Homes for Women and Children (Regulation) Act, 2014.

இயக்குநர்: Act 18/2014–ன்படி தமிழ்நாட்டில் வாழும் மகளிருக்கான விடுதிகள் குறித்த regulation கொண்டுவரப்பட்டது. அதற்கு 2015–ல் விதிகள் கொண்டுவந்தோம். இதன்படி மாவட்ட ஆட்சியர்தான் licence issuing authority. மாவட்ட ஆட்சியருக்கு உதவ DSWO அல்லது DPO–ஐ competent authority ஆக designate செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் விடுதிகள் முறையாக நடத்தப்படுகிறதா என்பதை பார்க்க இரண்டு விதமான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அதில் ஒன்று, registration of hostels என்ற procedure. 2014–க்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட விடுதிகள் வேறு ஏதாவது ஒரு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தால், உதாரணத்திற்கு Societies Act–ன்கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தால், ஆறு மாத காலத்திற்குள் இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என்று விதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. இதுதவிர, இன்னொரு நடைமுறை என்னவென்றால், மாவட்ட ஆட்சியரிடம் licence–க்கு விண்ணப்பித்து அதை பெற வேண்டும் என்பதுதான். அவ்வாறு விண்ணப்பித்த 20 நாட்களுக்குள் DSWO, DPO, DDR, PA (Accounts), Health Department ஆகியோர் உள்ளடக்கிய ஒரு குழு inspection

மேற்கொள்ளும். பிறகு Inspection report–ல் இருக்கும் Form 1, 2, 3, 4 ஆகியவற்றின்படி report கொடுக்க வேண்டும். இந்த inspection முடிந்த ஒரு வார காலத்திற்குள் அதன் அறிக்கையை மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்க வேண்டும். அதை base ஆக வைத்து, மாவட்ட ஆட்சியர் licence தருவார். இதுதான் நடைமுறை.

துணைச் செயலாளர்: தமிழ்நாட்டில் எத்தனை விடுதிகள் இருக்கின்றன?

இயக்குநர்: மொத்தம் 1,453 விடுதிகள் district-wise இருக்கின்றன. இதில் 451 விடுதிகளுக்கு registration கொடுத்திருக்கிறோம். Register செய்யப்பட்ட அனைத்து விடுதிகளுக்கும் மாவட்ட ஆட்சியரால் licence கொடுக்கப்பட்டுள்ளது. 451 விடுதிகள் தான் register செய்து licence வாங்கியிருக்கிறார்கள்.

செயலாளர்: ஒரு விடுதியில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மகளிர் தங்க வேண்டுமென்றால், இவ்வளவு Square feet இருக்க வேண்டுமென்று நீங்கள் ஏதாவது விதி வைத்திருக்கிறீர்களா?

இயக்குநர்: ஆம். 10 எண்ணிக்கையில் மகளிர் தங்க வேண்டுமென்றால் 1200 சதுர அடி இருக்க வேண்டும். அதாவது, ஒருவருக்கு 120 சதுர அடி இருக்க வேண்டும்.

செயலாளர்: அரசாங்கத்தின் விடுதிகள் எத்தனை உள்ளன? 20 விடுதிகள் தொடங்குவதற்காக, 4 வருடங்களுக்கு முன்னால், ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டது. சொந்தக் கட்டடத்திற்கு வாய்ப்பு இல்லை என்பதால் வாடகைக் அடிப்படையில் போயிருக்கிறார்கள். அந்த இடத்தில் 50 எண்ணிக்கை மகளிர் தங்குவதற்கான விடுதிக் கட்டடங்களுக்குப் பதிலாக 5 பேர்கூட தங்க முடியாத அளவிலான கட்டடங்களை வாடகைக்கு எடுத்து 50,000 வாடகை கொடுத்து தங்க வைத்துள்ளார்கள். இம்மாதிரியான இனங்களில் உங்களிடம் புகார் வந்தால்தான் கண்டறிய முடியுமா?

இயக்குநர்: தஞ்சாவூரில் தனியார் கட்டடத்தில் இருந்த விடுதி சென்ற மாதம்தான் அரசுக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. 50 விடுதிகளில் நிறைய விடுதிகள் தனியார் கட்டடத்தில் இயங்கியதெல்லாம் மூடப்பட்டு, தற்போது ஒன்று அல்லது இரண்டு இடங்களில்தான் தனியார் கட்டடங்களில் விடுதிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மீதி அனைத்தும் அரசாங்கக் கட்டடத்தில்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

திரு. M.K. மோகன்: மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் licence கொடுத்ததுபோக மற்ற விடுதிகளுக்கு licence வாங்க அழுத்தம் கொடுக்கலாம். Licence வாங்கித்தான் நடத்த வேண்டும் என்று order போட வேண்டும்.

இயக்குநர்: துறை சார்பாக notice கொடுக்கிறோம். Complaints வரும்போது தவறுகள் கண்டறியப்பட்டாலும், ஆய்வின்போது தவறுகள் கண்டறியப்பட்டாலும் notice கொடுக்கிறோம். பல இடங்களில் unlicensed விடுதிகளை மூடி இருக்கிறோம்.

திரு. இ. பரந்தாமன்: நீங்கள் சொன்ன 1,453 விடுதிகள் commercial ஆக இயங்கக்கூடிய விடுதிகள். இது இல்லாமல், அரசு நடத்தக்கூடிய விடுதிகளின் விவரங்களை செயலாளர் அவர்கள் கேட்டார்கள். அதற்கான விவரங்களை தருவதாக சொல்லியிருக்கிறீர்கள். இம்மாதிரியான விடுதிகளை நிறைய NGOs நடத்துகிறார்கள். அவர்களை monitor செய்வதற்கான நடவடிக்கை என்ன? அவர்கள் licence வாங்காமல் நடத்திக்கொண்டிருக்கிறார்களா? அவர்களும் நீங்கள் கூறிய 1,453 விடுதிகளுள் வந்துவிட்டார்களா? அண்ணா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோன்று, 1,453–ல் 451 தான் licence apply செய்து வாங்கி இருக்கிறார்கள். உங்கள் கணக்குப்படி இன்னும் 1,002 பேர் licence apply செய்யாமலே இருக்கிறார்கள். இதை எவ்வளவு நாள் அப்படியே விடுவது? ஏதாவது ஒரு time frame fix செய்து, இந்த time–க்குள் licence apply செய்து வாங்கவில்லையென்றால், விடுதியை நடத்த முடியாது என்பது போன்று order போட வேண்டும். வேறு வழி இல்லாத மகளிர் அவசரத் தேவைக்காக வெளியூரிலிருந்து வந்து தங்குகிறார்கள். அப்படி தங்குபவர்களுக்கு வேறு ஏதாவது இடர்பாடு வருவதற்கு நாம் துணை போய்விடக் கூடாது. இதற்கு துறையின் சார்பாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?

இயக்குநர்: ஒரு Licence வாங்கியவுடனே சம்பந்தப்பட்டவர்கள் Building Stability Certificate, Sanitary Certificate, Fire Rescue Department–லிருந்து Fire Licence ஆகிய மூன்றையும் வாங்கி apply செய்தால்தான் licence கொடுக்கிறோம். இதை வாங்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் சிரமப்படுகிறார்கள். குறிப்பாக, Building Stability Certificate

வாங்குவதற்கு விடுதி நடத்துபவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால்தான் delay ஆகிறது. தற்போது online–ல் கொண்டுவந்த பிறகு DSW office–ற்கு போகாமல் TN Guidance Bureau மூலமாக online–லேயே 1-7-2022 முதல் apply செய்யலாம் என்று இணையதளத்தை தயாராக வைத்திருக்கிறோம். அதற்கான instructions DSWO–க்கு வழங்கியிருக்கிறோம்.

திரு. இ. பரந்தாமன்: நீங்கள் licence apply செய்யும் procedure–ஐ இலகுவாக்குகிறீர்கள். ஆனால், licence–ஐ இத்தனை நாட்களுக்குள் வாங்கியாக வேண்டும் என்று cut-off date நிர்ணயிக்க வேண்டும்.

இணைச் செயலாளர்: குழுவிற்கு ஒரு submission. 1,002 case registration செய்யவில்லை. அதில் 863 case-க்கு Show Cause Notice issue செய்திருக்கிறோம். அதிலே time limit போட்டுத்தான் கொடுத்திருக்கிறோம். 1 மாதம் அல்லது 2 மாதத்தில் licence வாங்கவில்லையென்றால், மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அனுப்பி விடுதியை மூடிவிடுவார்கள். Notice கொடுத்ததற்குப்பிறகு 183 cases apply செய்திருக்கிறார்கள். 107 cases registration process–ல் இருக்கிறது.

இயக்குநர்: 342 விடுதிகள் மூடப்பட்டுள்ளன.

திரு. இ. பரந்தாமன்: ஒரு suggestion என்னவென்றால், விடுதிகளை monitor செய்வதற்கு Doctors, Deputy Tahsildar ஆகியோரைக் கொண்ட ஒரு official team வைத்திருக்கிறீர்கள். But they are loaded with so many works. தற்போது Family Court-ல் Counselling செய்வதற்காக NGOs–ஐ engage செய்வதுபோல, விடுதிகளை monitor செய்வதற்கு local ஆக district level-ல் public participation–உடன் elected representatives, Local Ward Councillors ஆகியோர் அடங்கிய ஒரு Committee–ஐ உருவாக்கினால் சிறப்பாக இருக்கும். Social Welfare department–ல் நிறைய வேலை இருப்பதால், practical ஆக உங்களுக்கு complaint வந்தால்தான் போக முடியும். ஆனால், Monitoring Committee மூன்று மாதத்திற்கு ஒரு முறை போய் பார்க்கலாம். Then only, added light will be thrown upon the department. நீங்கள் vigilant ஆக monitor செய்ய

முடியும். எனவே, elected representatives–ஐ வைத்து ஒரு குழுவை உருவாக்கி, மூன்று மாதத்திற்கு ஒரு முறை விடுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்ய வேண்டும். அதை Collector–க்கு Report ஆக கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய suggestion, subject to the convenience of the Committee.

SECRETARY: Definitely it has to be done; it can also be recommended by the Committee. During the next district tour by the Committee, surprise inspection may be carried out.

தலைவர்: சில விடுதிகளில் basic amenities கூட இல்லாமல் உள்ளது என்று புகார் வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதைப்போல் மூன்று மாதத்திற்கு ஒரு முறை surprise inspection செய்தால் நன்றாக இருக்கும்.

செயலாளர்: தலைவர் அவர்கள் மற்றும் உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, நீங்கள் licence கொடுக்கும்போது District Social Welfare Officer அறிக்கையின்படி கொடுத்துவிடுகிறீர்கள். District–லிருந்து வருகின்ற அறிக்கை சரியாக உள்ளதா என்பதையும் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், 50 மகளிர் தங்குவதாக இருந்தால், அதற்கேற்ப கழிவறைகள் மற்றும் குளியலறைகளின் எண்ணிக்கை இருக்க வேண்டும். மீண்டும், மீண்டும் நீங்கள் ஆய்வு செய்தால்தான் அது சுத்தமாக பராமரிக்கப்படுகிறதா, தண்ணீர் வசதி இருக்கிறதா என்பதையெல்லாம் பார்க்க முடியும். நிறைய சமூக நலக் கூடங்கள் மற்றும் விடுதிகளில் கழிப்பறை வசதி இருக்கும், ஆனால் தண்ணீர் வசதி இருக்காது. அதனால் யாரும் பயன்படுத்த முடியாத நிலை இருக்கும். மகளிர் தங்கும் இடங்களில் சுற்றுச்சுவர் கட்டாயமாக இருக்க வேண்டும். உங்களுடைய guidelines–ல் எல்லாமே இருந்தாலும், அது முறையாக உள்ளதா என்பதை நேரடியாகப் போய்தான் பார்க்க வேண்டும்.

DEPUTY SECRETARY: What are the functions of Homes and Hostels?

இயக்குநர்: Working Women's Hostel என்பது பொதுவாக on payment தான் இருக்கும். Home என்பது இலவசமாக accomodation with food கொடுப்பது.

திரு. மா. செந்தில்குமார்: நிறைய விடுதிகளில் மகளிர் போய் சேர்ந்துவிடுகிறார்கள். சேர்ந்த பிறகு, அங்குள்ள குறைபாடுகள், சிக்கல்கள் குறித்து யாரிடமும் சொல்ல முடிவதில்லை. வந்துவிட்டோம் என்ற காரணத்தினால் அவர்களின் வருத்தத்தை பெரும்பாலும் மனதிற்குள் வைத்துக்கொள்ளும் சூழ்நிலையே உள்ளது. எனவே, விடுதிகளை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. மு. பன்னீர்செல்வம்: நம்முடைய குழுவின் மூலமாக monitor செய்வதற்கு வலியுறுத்தலாம்.

செயலாளர்: குழு பரிந்துரை செய்து, அதன்மேல் துறை நடவடிக்கை எடுக்கலாம். மகளிர் விடுதிகளை ஆய்வு செய்வது குறித்து ஒரு கடிதத்தினை தங்கள் துறையின் செயலாளர் அவர்களுக்கு குழுவின்மூலம் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கிறோம். அவ்வாறு ஆய்வு செய்யும்போது பொது மக்களின் பிரதிநிதிகளையும் அழைத்துக்கொண்டு போய் பாருங்கள்.

திரு. இ. பரந்தாமன்: இதற்கென Standard Monitoring Committee என்ற குழுவை constitute செய்தால் பயனுள்ளதாக இருக்கும். அக்குழு 3 மாதங்களுக்கொரு முறை மகளிர் விடுதி போன்றவற்றை ஆய்வு செய்யலாம். SC, ST வகுப்பினரின் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு 3 அல்லது 6 மாதங்களுக்கொருமுறை கூட்டப்படுகிறது. அதேபோன்று, சமூக நலத் துறையின்மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், NGOs, குழந்தைகள் மற்றும் மகளிர் நலனில் ஆர்வம் உள்ளவர்கள் ஆகியோரை உள்ளடக்கி ஒரு குழுவை அமைக்கலாம். யாரெல்லாம் அக்குழுவில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என தீர்மானித்து, மக்கள் பிரதிநிதிகளையும் அக்குழுவில் உறுப்பினர்களாக சேர்த்து, மூன்று மாதங்களுக்கொரு முறை ஆய்வு செய்தால் சுலபமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

இயக்குநர்: குழு தெரிவித்த கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறோம்.

செயலாளர்: இக்குறிப்பாணையைப் பொறுத்தவரையில் Explanatory Notes முறையாக இணைக்கப்படவில்லை. வருங்காலங்களில் இத்தகைய தவறுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

இயக்குநர்: இனிவருங்காலங்களில் இத்தகைய தவறுகள் நிகழாமல் பார்த்துக்கொள்கிறோம். நன்றி.

The Committee recommended that Explanatory Notes should be properly appended to the Notification.

பின்னர், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை துறை அதிகாரிகள் விடைபெற்றனர்.

செயலாளர்: அடுத்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்ந்த குறிப்பாணையை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். தற்போது துறை அதிகாரிகளை குழுவின்முன் அழைக்கலாம்.

The following Officers of Youth Welfare and Sports Development Department were present:

1. Thiru A. Ramanathan,
   Deputy Secretary to Government,
   Youth Welfare and Sports Development Department,
   Chennai-9.
2. Dr. Sathiyakumar,
   Director,
   Tamil Nadu Physical Education and Sports University,
   Chennai.

The deliberations are summarised as under:

இயக்குநர்: இப்பல்கலைக்கழகத்தின் பதிவாளர் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாத காரணத்தால் அவருக்கு பதிலாக நான் வந்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MEMORANDUM NO.25/ 2021 -2023

Sub: Tamil Nadu Physical Education and Sports University Act, 2004 - Prescribed the educational qualifications and experience for the post of Vice-Chancellor of Tamil Nadu Physical Education and Sports University - Notification issued - Regarding.

* * * * *

(G.O.(Ms) No.47, Youth Welfare and Sports Development (YW2) Department, dated 7.11.2017)

In exercise of the powers conferred by clause (ii) of sub-section (2-A) of Section 12 of the Tamil Nadu Physical Education and Sports University Act, 2004 (Tamil Nadu Act 9 of 2005), the Government of Tamil Nadu in consultation with the Chancellor of the Tamil Nadu Physical Education and Sports University, hereby specifies that every person recommended by the committee, referred to in sub-section (2) of Section 12 of the said Act, for appointment as Vice-Chancellor shall possess the following educational qualifications and experience, namely:-

(1) A Ph.D. Degree in Physical Education (or) Sports;

(2) Not less than twenty years of experience in teaching and research in Universities or post graduate colleges or publicly funded research institutions or in all taken together;

or

Not less than ten years of experience as Professor in a University system;

(3) Not less than six years of administrative experience in Universities or post graduate colleges or publicly funded research institutions in positions such as Dean, Head of the Department or any other such administrative positions of equal or higher degree of responsibility or in all taken together;

(4) Must have published not less than five research papers in University Grants Commission listed journals after acquiring Ph.D or authored not less than two books (non edited books) if adequate number of such University Grants Commission listed journals are not available; and

(5) Must have presented not less than two papers in international level academic or research events and possess experience of having conducted not less than one such academic or research event.

The Government has prescribed the educational qualifications and experience for the post of Vice-Chancellor of the Tamil Nadu Physical Education and Sports University and issued the Notification.

துணைச் செயலாளர்: இந்த குறிப்பாணையைப் பொறுத்தவரையில், Vice-Chancellor appointment குறித்து Notification போடப்பட்டுள்ளது. இதற்கு முன்பு எவ்வாறு Vice-Chancellor பதவி நியமனம் செய்யப்பட்டது என்பதை குழுவிற்கு தெரிவிக்கவும்.

அரசு துணைச் செயலாளர்: இதற்கு முன்பு, அனைத்து பல்கலைக்கழகங்களிலும், எந்த பணியிடத்திற்கும், educational qualification specify செய்ததில்லை. Higher Education Department-லிருந்து ஒரு Ordinance போட்டு எல்லா பல்கலைக்கழகங்களிலும் educational qualification specify செய்ய வேண்டுமென தெரிவித்த பிறகு, அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் educational qualification specify செய்தார்கள். Based on that, Tamil Nadu Physical Education and Sports University-லும் Vice-Chancellor பதவிக்கு educational qualification prescribe செய்யப்பட்டது.

துணைச் செயலாளர்: தற்போது Vice-Chancellor தாங்கள் prescribe செய்துள்ள educational qualification படிதான் நியமனம் செய்யப்படுகிறாரா?

அரசு துணைச் செயலாளர்: ஆம்.

செயலாளர்: தங்கள் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை, சட்டத்தின் மூலமாக அல்லாமல் விதிகளின் மூலமாக amendment கொண்டு வந்துள்ளீர்கள். மற்ற பல்கலைக்கழகங்களில் எவ்வாறு amendment கொண்டு வந்துள்ளார்கள்? சட்டத்தின் மூலமாகவா அல்லது விதிகளின் மூலமாகவா?

அரசு துணைச் செயலாளர்: சட்டத்தின் மூலமாகத்தான் amendment கொண்டு வந்துள்ளார்கள்.

திரு. இ. பரந்தாமன்: Tamil Nadu Physical Education and Sports University–க்கு ஒரு சட்டம் இருக்க வேண்டும். That is the source of power. அத்தகைய சட்டம் இயற்றப்பட்ட பிறகுதான் விதிகள் கொண்டுவரப்படும். எதை refer செய்து நீங்கள் amendment போடுகிறீர்கள்?

செயலாளர்: சட்டத்தைத்தான் refer செய்கிறார்கள். By clause (ii) of sub-section (2-A) of Section 12 of the Tamil Nadu Physical Education and Sport University Act, 2004 and in consultation with the Chancellor of the University, Vice-Chancellor பதவிக்கு educational qualification prescribe செய்துள்ளார்கள். இதில் Section 12-ல் என்ன சொல்லப்பட்டுள்ளது?

அரசு துணைச் செயலாளர்: Vice-Chancellor எவ்வாறு நியமனம் செய்யப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு துணைச் செயலாளர், சட்டத் துறை: சட்டத்தில் பொதுவாக educational qualification prescribe செய்வதில்லை. ஏனெனில் அவ்வப்போது பணியின் தன்மைக்கேற்ப qualification–ன் தேவையும் மாறிக்கொண்டே இருக்கும். ஆகவே, சட்டத்தில் அல்லாது, விதிகளில் தேவையான educational qualification–ஐ prescribe செய்து proper ஆக செய்ய முடியும்; தேவை ஏற்படும்போது அதனை amend செய்யலாம். மத்திய அரசின் University Grants Commission and other Governing bodies தேவைக்கேற்ப அப்போதைக்கப்போது qualification–ஐ மாற்றிக்கொள்வார்கள். Tamil Nadu Physical

Education and Sports University–க்கென special rules இருக்கிறது. Vice-Chancellor பதவிக்கு Ph.D. degree in Physical Education or Sports கண்டிப்பாக வேண்டும் என்று prescribe செய்யும்போது special rules-ஐ amend செய்ய வேண்டும்.

செயலாளர்: மற்ற பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில் சட்டத்தின் மூலமாகத்தான் amendment கொண்டுவரப்படுகிறது. ஆனால் இதற்கு தனியாக விதிகளில் amendment கொண்டுவருகிறீர்களே? அவசர சட்டத்தின் மூலமாக உயர் கல்வித் துறையிடமிருந்து தாக்கீது வரப்பட்டது என்று நீங்கள்தான் தெரிவித்துள்ளீர்கள்.

அரசு துணைச் செயலாளர்: Amendment போட்டு, Assembly–ல் place செய்துதான் கொண்டு வந்துள்ளோம்.

செயலாளர்: Section 12–ல் amendment செய்துள்ளீர்களா? எப்போது?

அரசு துணைச் செயலாளர்: 2018 ஆம் ஆண்டு செய்துள்ளோம்.

திரு. இ. பரந்தாமன்: According to clause (ii) of sub-section (2-A) of Section 12 of the Tamil Nadu Physical Education and Sports University Act, 2004 (Tamil Nadu Act 9 of 2005), as amended by Tamil Nadu Act 44 of 2017, a person recommended by the Committee for appointment as Vice-Chancellor shall possess such educational qualification and experience as may be specified by the State Government என்று Explanatory Note-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. Amendment 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ளது.

செயலாளர்: ஆம். 2017 ஆம் ஆண்டு amendment கொண்டு வந்து, அதிலிருந்து இதனை derive செய்துள்ளார்கள்.

No modification is recommended.

செயலாளர்: இக்குழுக் கூட்டத்திற்கு வருகை புரிந்து விளக்கமளித்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அதிகாரிகள் விடைபெற்றனர்.

துணைச் செயலாளர்: அடுத்து, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்ந்த குறிப்பாணையை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். தற்போது துறை அதிகாரிகளை குழுவின்முன் அழைக்கலாம்.

The following Officers of the Information Technology and Digital Services Department were present:

1. Thiru S. Venkatesh
   District Revenue Officer -
   Joint Director (Tech)
   Chennai.

2. Thiru R. Kumar,
   Under Secretary to Government,
   Information Technology and Digital Services Department
   Chennai-9.

The deliberations are summarised as under:

MEMORANDUM NO.26/ 2021 – 2023

Sub: Framing of Information Technology (Electronic Service Delivery) Rules, 2016 and subsequent errata to the Notification Issued - Regarding.

G.O.(Ms) No.13, Information Technology (e.Gov.I) Department, dt. 2.12.2016)

In exercise of the powers conferred by Section 90 read with Sections 6 and 6A of the Information Technology Act, 2000 (Central Act 21 of 2000), the Government of Tamil Nadu issued the Tamil Nadu Information Technology (Electronic Service Delivery) Rules, 2016:-

RULES

Rule 1 - relates to short title and commencement of the rules.

Rule 2 - relates to definition of certain words and expression of the rules.

The Committee may observe that in sub-rule (1) of rule 2; clause (d) was missing in the Definitions.

Rule 3 - relates to powers vested with government to authorize one or more Authorised Service Providers for the efficient delivery.

Rule 4 - deals with the legal status of digital signature certificates used in e-service delivery.

Rule 5 - relates to the time limit prescribed by the Government to the competent authorities for implementing and improvising the e-service delivery system in all public services.

Rule 6 - relates to duties of Competent and Signing Authorities.

Rule 7 - envisages the functions and powers of Director of e-service delivery.

Rule 8 - relates to Authorised Service Providers for e-service delivery.

Rule 9 - relates to appointment of Authorised Agents by the Authorised Service Provider.

Rule 10 - relates to commencement of operations by the Authorised Service Provider.

Rule 11 - relates to collection of service charge by the Authorised Service Provider as determined by the Director of e-service delivery.

Rule 12 - relates to the Fees to be collected by the Authorised Service Provider

Rule 13 - deals with apportioning of service charges.

Rule 14 - deals with acknowledgment for the payment and other conditions of obtaining e-services from the Authorised Service Provider or Authorised Agent.

Rule 15 - relates to legal recognition of receipt or payment of money or in favour of Government made by the Authorised Service Provider or Authorised Agent.

Rule 16 - relates to validation of form, application or any other document.

Rule 17 - relates to issue or grant of any license, permit, sanction or approval issued under clause (b) of sub-section (1) of section 16.

Rule 18 - relates to creation and maintenance of digitally signed electronic records.

Rule 19 - envisages the procedure to be followed by the Competent Authority or signing authority while making any changes in a repository of digitally signed electronic records.

Rule 20 - relates to certain features and capabilities to be followed by the Competent Authority or Authorised Service Provider while creation of secured application software for E-Service Delivery.

Rule 21 - relates to the procedure for delivery of e-services by the Authorised Service Provider or Authorised Agent.

Rule 22 - relates to verification of digitally signed documents.

Rule 23 - relates to audit of information systems and documents of Authorised Service Provider or Authorised Agents by the Director of E- service delivery.

Rule 24 - relates to regulating powers vested with Director of E- service delivery.

Rule 25 - relates to use of special stationery in Electronic service delivery as determined by the Director of E- service delivery.

Rule 26 - relates to prevalence of Rules.

Rule 27 - relates to hierarchy of appeal system.

Rule 28 - relates to residuary powers vested with the Secretary to Government, Information Technology Department.

The Committee observed that rule 7(1)(a)(b)(c) has been printed mistakenly in the Notification and in the Gazette Publication.

The Committee also observed that there was a delay of one and half year in placing the Notification on the Table of the House, after its publications in the Tamil Nadu Government Gazette Extraordinary dated 14.12.2016.

(G.O.(Ms) No.10, Information Technology (e.Gov.I) Department, dt. 11.7.2017)

The following Errata are issued to the Information Technology Department Notification No. SROA-26/2016, published at pages 84-91 of Part III- Section 1(a) of the Tamil Nadu Government Gazette issue No. 49, dated 14.12.2016.

Errata

In the Notification,-

(1) after clause (c) of sub- rule (1) in rule 2, the following expression has been read as clause (d):-

"(d) "Body Corporate" means any company or body established under any Law, and includes a firm, sole proprietorship or other association of individuals engaged in commercial or professional activities;"

(2) after rule 6, incomplete part of rule 7 has been omitted.

(3) after clause (e) of sub- rule (3) in rule 20, the following expressions has been read as clauses (f), (g), (h) and sub-rule (4) respectively:-

f. evidentiary value in terms of authenticity and integrity.

g. controlled destructibility; and

h. augmentability.;

(4) The Competent Authority shall get such application software audited by a third party agency, so as to ensure its security, reliability, performance and consistency, before it is deployed and also as and when changes are made in the application software."

The Committee is of the view that the Department should take proper care while publishing in Government Gazette Extraordinary and placing it on the Table of the House and avoid subsequent Errata for flimsy reasons.

துணைச் செயலாளர்: Information Technology (Electronic Service Delivery) Rules குறித்து குழுவிற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): Information Technology (Electronic Service Delivery) Rules, 2016–ஐ 2-12-2016 அன்று Gazette–ல் notify செய்தோம். அரசு மூலமாக கொடுக்கப்படும் services அனைத்தையும் online மூலமாக கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட விதிகள் இவை. இதற்கு Director, Electronic Service Delivery ஆக TNeGA-ன் CEO நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். Rules notify ஆன 180 நாட்களுக்குள் அனைத்து HOD–ம் அவர்களிடம் இருக்கும் services–ஐ notify செய்ய வேண்டும். Notification கொடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் அந்த services அனைத்தையும் online மூலமாக பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் இந்த விதிகளின் முக்கிய நோக்கம். இதன்படி 643 services notify செய்யப்பட்டுள்ளன. இதில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 334 services இன்றைய தேதியில் online–ல் வழங்கப்படுகின்றன.

79 services TNeGA-விடம் under development–ல் இருக்கிறது. Regarding 28 services, we are approaching the Departments because they have to do it. 186 services-ஐ denotify செய்துகொள்கிறோம் என்று departments கூறியுள்ளன. இதில் repeated entries–ம் இருக்கின்றன. உதாரணத்திற்கு, Directorate of Collegiate Education மற்றும் Collegiate Education Department ஆகிய இரண்டும் notification கொடுத்துள்ளன. அதனால், repeated entry ஏற்பட்டுள்ளது. இதுபோல் 16 services repeated entries ஆக உள்ளன. 334 services-ல் 121 services-ஐ இ–சேவை மையம் மூலமாக வழங்கிக்கொண்டிருக்கிறோம். TNeGA–ல் திறந்தவெளி இணையதளம் ஒன்று இருக்கிறது. அதன்மூலம் வீட்டிலிருந்தபடியே நேரடியாக விண்ணப்பித்து services-ஐ பெறும் விதமாக 22 services வழங்கிக்கொண்டிருக்கிறோம்.

செயலாளர்: 334 services-ல் MA&WS and RD Departments மூலமாக எவ்வளவு வருவாய் வருகிறது?

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலமாக வழங்கப்படும் 33 services-ல் 26 services-ஐ online–ல் கொண்டுவந்திருக்கிறோம்.

செயலாளர்: MA&WS Department என்றால் particularly சென்னை மட்டுமா அல்லது வேறு மாவட்டங்களிலும் இந்த services வழங்கப்படுகின்றனவா?

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): சென்னை மாநகராட்சி, CMDA ஆகியவற்றிலும் இந்த services இருக்கின்றன.

திரு. இ. பரந்தாமன்: Municipality மற்றும் Town Panchayats-ல் இருக்கின்றனவா?

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): Directorate of Town Panchayat மற்றும் Commissionerate of Municipalities–ல் இருக்கிறது.

செயலாளர்: தமிழ்நாட்டில் உள்ள 528 பேரூராட்சிகளிலும் இந்த services வழங்கப்படுகின்றனவா என்றுதான் உறுப்பினர் கேட்கிறார்.

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): Town Panchayats–ஐ பொறுத்தவரைக்கும் 8 services notify செய்திருக்கிறோம். அவற்றில் 1 service online–ல் கிடைக்கும்படி செய்துவிட்டோம். 6 services development–ல் இருக்கின்றன.

செயலாளர்: Town Panchayats–ல் பொதுமக்களால் கூறப்படும் முக்கியமான குறை online சரியாக இல்லை என்பதுதான். Data feed செய்யும்போது நிறைய இடையூறுகள் வருவதாகக் கூறுகிறார்கள். Feed செய்த பிறகும், குறிப்பிட்ட காலத்திற்குள் services நிறைவடைகிறதா, பெறப்படுகிறதா என்றால், இல்லை என்றுதான் கூற வேண்டும். தற்போது சென்னை பெருநகர மாநகராட்சியின் திட்ட அனுமதியைப் பெற நேரடியாக online–ல் விண்ணப்பிக்கலாம் என்று சொல்கிறீர்கள். ஆனால், தேவைப்படும் ஆவணங்களை முழுவதுமாக கொடுத்த பிறகும்கூட அந்த service கிடைக்கப்பெறுவதில்லை. நிறைய Town Panchayats–ல் implement ஆகவில்லை.

நீங்கள் குறிப்பிட்ட 5 ஆண்டு காலத்தை எடுத்துக்கொண்டால், 2016–ல் கொண்டுவரப்பட்ட இந்த விதிகள் 2021–லாவது implement செய்யப்பட்டிருக்க வேண்டும். நீங்கள் எந்த system–ல் services வழங்குகிறீர்கள்?

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): TNeGA-ன் e-sevai application மூலமாக இந்த services–ஐ வழங்குகிறோம். மற்றபடி, ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு system follow செய்கிறார்கள்.

Town Panchayats–ல் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் பெறுவதை online–ல் enable செய்திருக்கிறோம்.

திரு. இ. பரந்தாமன்: ஏன் வெவ்வேறு service providers பயன்படுத்தப்படுகின்றன? Uniform ஆக இருந்தால் speed ஆக இருக்குமல்லவா? அது பொதுமக்களுக்கு மேலும் பயன் தருமே?

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): Town Panchayats-ஐ எடுத்துக்கொண்டால் Directorate of Town Panchayats மூலம் fix செய்வார்கள். அதனால் அனைத்து Town Panchayats–க்கும் பொதுவான ஒரு service provider இருப்பார்கள்.

இது State Data Centre மூலமாக செய்யப்படுகிறது. Municipal Administration-லும் இதேபோல் தான் செய்யப்படுகிறது. சென்னை கார்ப்பரேஷனில் மட்டும்தான் தனியாக செய்கிறார்கள்.

THIRU I. PARANTHAMEN: Each and every Town Panchayat cannot have its own separate service provider. Directorate of Town Panchayat-க்கு ஒரு service provider, Commissionerate of Municipal Administrate-க்கு ஒரு service provider என்று இருந்தால் speed and accuracy பாதிக்கப்படும் என்பது என்னுடைய கருத்து. சென்னை கார்ப்பரேஷன் website–ல் login செய்தால் speed ஆக இருக்கிறது, ஆனால், Town Panchayat–ல் slow ஆக இருக்கிறது என்று சொல்கிறார்கள். Topmost service provider எது என்று பார்த்து அரசு முடிவு எடுக்க வேண்டும்.

திரு. இரா. இராஜேந்திரன்: Server slow ஆக இருக்கிறது என்பதுதான் முக்கியமான புகாராக இருக்கிறது.

SECRETARY: You have to look into all these things while providing service.

JOINT DIRECTOR (TECH): In order to provide security of data, TNSDC and ELCOT are maintaining it at present.

திரு. இ. பரந்தாமன்: மூன்று service providers இருந்தால் யாரை engage செய்ய வேண்டும் என்று அரசுதான் முடிவெடுக்க வேண்டும். இந்தப் பணியை ELCOT செய்தால் data security இருக்கும். வேறு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தால் liability fix செய்ய முடியாது. அதனால், இதை uniform ஆகக் கொண்டு வர வேண்டும்.

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): தகவல் தொழில்நுட்பவியல் துறையிலிருந்து அனைத்து துறைகளுக்கும் instruction கொடுத்திருக்கிறோம். தற்போது 80% பணிகள் ELCOT மூலமாகத்தான் செய்யப்படுகின்றன.

துணைச் செயலாளர்: 2016–ல் notify செய்யப்பட்டதை 2018–ல்தான் பேரவையில் வைத்திருக்கிறீர்கள். கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் காலதாமதமாகியுள்ளது. வருங்காலத்தில் இதுபோன்ற தாமதத்தை தவிர்க்கவும்.

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): வருங்காலத்தில் இதுபோன்ற தாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறோம்.

செயலாளர்: Notification-க்கு errata போட்டிருக்கிறீர்கள். அந்த errata–வில் mistake இருக்கிறது.

திரு. இ. பரந்தாமன்: சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திலும் ஒரு இ–சேவை மையம் அமைப்பது குறித்த அறிவிப்பின்மீதான நடவடிக்கை எந்த அளவிற்கு முன்னேற்றத்தில் உள்ளது? இ–சேவை மையங்கள் அமைப்பதற்கு விண்ணப்பிப்பதில் சில சிரமங்கள் இருப்பதாக தெரிகிறது.

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): TNeGA பொறுத்தவரைக்கும் நேரடியாக இ–சேவை மையங்கள் நடத்துவதில்லை. TN Arasu Cable TV நிறுவனம், PACCS, VPRC மற்றும் VLE, Central Government Agency இவர்கள் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். Checklist-ல் உள்ளதுபோன்ற infrastructure-ஐ செய்து கொடுத்தால், user-ID மற்றும் password கொடுக்கிறோம். தற்போது தூத்துக்குடியிலிருந்து கேட்டிருக்கிறார்கள். அதை process செய்துகொண்டிருக்கிறோம். இங்கே ஏதாவது Agency மூலமாக நடத்துவதற்கு விருப்பம் உள்ளவர்கள் மனு கொடுக்கும்போது, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அலுவலகத்தில் வைப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

THIRU I. PARANTHAMEN: So, you are giving permission only to the agencies and not particularly to the MLA office. Am I right?

இணை இயக்குநர் (தொழில்நுட்பம்): ஆம். Agencies–க்கு மட்டும்தான் permission கொடுக்கப்படுகிறது.

செயலாளர்: Notifications–ல் வருங்காலங்களில் இம்மாதிரியான தவறு இல்லாதவண்ணம் பார்த்துக்கொள்ள குழு அறிவுறுத்துகிறது.

The Committee recommends that printing mistakes in the notification and in Gazette publication should be avoided.

The Committee decided to reiterate its earlier recommendation that the Notifications should be placed before the Assembly within 6 months from the date of issue of Notification.

The Committee also recommended that issue of errata for flimsy reasons should be avoided.

XXXXX	XXXXX	XXXXX	XXXXX
XXXXX	XXXXX	XXXXX	XXXXX

இணைச் செயலாளர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மற்றும் குழுக் கூட்டத்திற்கு வருகை தந்து விளக்கமளித்த நிதித் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை ஆகிய துறைகளின் அலுவலர்களுக்கும், சட்டத் துறையின் துணைச் செயலாளர் அவர்களுக்கும் குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர், குழு கலைந்தது.

*****

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON DELEGATED LEGISLATION

PROCEEDINGS OF THE MEETING

Friday, the 21st June 2024

The Committee on Delegated Legislation met at 4.30 P.M. on Friday, the 21st June 2024 in the Male Members' Lounge Room, Secretariat, Chennai - 600 009.

The following members were present:

CHAIRMAN

1. Thiru. Sivakumar P @ Thayagam Kavi

MEMBERS

2. Thiru. J.L. Eswarappan
3. Thiru. J. J. Ebenezer @ J. John Ebenezer
4. Thiru. PST. Saravanan
5. Tmt. K . Sivagama Sundari
6. Thiru. K. Selvaraj
7. Thiru. T. Ramachandran
8. Thiru. K.R. Jayaram

SECRETARIAT

Dr. K. Srinivasan	-	Principal Secretary
Thiru. A. Ayyanperumal	-	Joint Secretary
Thiru. G. Ganesh	-	Deputy Secretary

முதன்மைச் செயலாளர்: மாண்புமிகு சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் சார்பாக முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். குழுத் தலைவர் அவர்களை கூட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு வருகை தந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்களே, திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர் அவர்களே, திரு. பெ.சு.தி. சரவணன் அவர்களே, திருமதி க. சிவகாமசுந்தரி அவர்களே, திரு. க. செல்வராஜ் அவர்களே, திரு. தி. ராமச்சந்திரன் அவர்களே, திரு. கே.ஆர். ஜெயராம் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் முதன்மைச் செயலாளர் அவர்களே, இணைச் செயலாளர் அவர்களே, துணைச் செயலாளர் அவர்களே, அலுவலர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

முதன்மைச் செயலாளர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவால் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குறிப்பாணைகளின் மீது அளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், தற்போது குழுவின் 10, 11, 12 மற்றும் 13 ஆகிய நான்கு வரைவு அறிக்கைகள் குழுவின்முன் ஒப்புதலுக்காக வைக்கப்படுகின்றன.

சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தற்போதைய உறுப்பினர்களைக்கொண்ட குழுவின் காலம் நிறைவு பெற்று, புதிய உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பு மாண்புமிகு பேரவைத் தலைவரால் விரைவில் அறிவிக்கப்பட உள்ள காரணத்தால் இவ்வறிக்கைகளை நாளை (22–6–2024) பேரவையில் சமர்ப்பிப்பதற்கு குழுவின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

The Committee took up for consideration the Draft Report **(TENTH REPORT) (16th ASSEMBLY)** relating to the Tamil Nadu Transparency in Tenders Act, 1998 (Tamil Nadu Act 43 of 1998), the Tamil Nadu Local Fund Audit Act, 2014 (Tamil Nadu Act 24 of 2014), the Factories Act, 1948 (Central Act LXIII of 1948), the Tamil Nadu Hostels and Homes for Women and Children (Regulation) Act, 2014 and The Information Technology Act, 2000 (Central Act of 2000).

After some discussion, the Committee approved the Draft Report without any modifications and the Committee authorised the Chairman to sign and present the Report to the Assembly on its behalf.

The Committee took up for consideration the Draft Report **(ELEVENTH REPORT) (16th ASSEMBLY)** relating to The Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Act, 2014, (Central Act 7 of 2014), The Tamil Nadu District Municipalities Act, 1920 (TN Act V of 1920) and Municipal Corporations Acts relating to various cities, The Tamil Nadu Municipal Laws (Fourth Amendment) Act, 2012 (TN Act 47 of 2012) and Municipal Corporations Acts relating to various cities, Mines and Minerals (Development and Regulation) Act, 1957 (Central Act 67 of 1957), Tamil Nadu Industrial Township Area Development Authority Act, 1997 (Tamil Nadu Act 33/97) and Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959)

After some discussion, the Committee approved the Draft Report without any modifications and the Committee authorised the Chairman to sign and present the Report to the Assembly on its behalf.

The Committee took up for consideration the Draft Report **(TWELFTH REPORT) (16th ASSEMBLY)** relating to the Tamil Nadu Prohibition Act, 1937 (TN Act X of 1937), The Tamil Nadu Value Added Tax Act, 2006 (TN Act 32 of 2006),

The Tamil Nadu Tax on Entry of Motor Vehicles into Local Areas Act, 1990 (Tamil Nadu Act 13 of 1990), The Tamil Nadu Goods and Services Tax Act, 2017 (Tamil Nadu Act 19 of 2017)

After some discussion, the Committee approved the Draft Report without any modifications and the Committee authorised the Chairman to sign and present the Report to the Assembly on its behalf.

The Committee took up for consideration the Draft Report **(THIRTEENTH REPORT) (16th ASSEMBLY)** relating to the Tamil Nadu Private Universities Act, 2019 (Tamil Nadu Act 14 of 2019), The Mental Health Act, 1987 (Central Act 14 of 1987), Tamil Nadu Clinical Establishments (Regulation) Act, 1997 (Tamil Nadu Act 4 of 1997), Tamil Nadu Public Health Act, 1939 (Tamil Nadu Act III of 1939), Tamil Nadu Vanniyakula Kshatriya Public Charitable Trusts and Endowments (Protection and Maintenance) Act, 2018 (Tamil Nadu Act 44 of 2018), The Haj Committee Act, 2002 (Central Act 35 of 2002).

After some discussion, the Committee approved the Draft Report without any modifications and the Committee authorised the Chairman to sign and present the Report to the Assembly on its behalf.

முதன்மைச் செயலாளர்: மாண்புமிகு தலைவர், உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பேரவைச் செயலகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

The Committee, then, adjourned.

Dr. K. SRINIVASAN
Principal Secretary